செ.வெ.எண் -50 நாள்:27.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

இந்தியாவிலேயே தமிழகத்தை தொழில் மிகை முன்னோடி மாநிலமாக உருவாக்கும் நோக்குடன் முதலீட்டாளர்கள் எளிதாக தொழில் தொடங்க வழிவகை செய்யும் பொருட்டு தமிழக அரசு தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம் - 2017ஐ இயற்றியுள்ளது.

இச்சட்டத்தில் தொழிற்சாலை துவங்க உரிமம் பெற வேண்டிய துறைகளான தீயணைப்பு துறை, பொது சுகாதாரத்துறை, மின்வாரியத்துறை மற்றும் பிற சம்பந்தப்பட்ட துறைகளிலும் எளிதாக உரிமங்கள் மற்றும் ஒப்புதலை பெறுவதற்கு ஆவண செய்யப்பட்டுள்ளது.

புதிதாக தொழில் தொடங்குவோர் மற்றும் தொழில் விரிவாக்கம் செய்ய விரும்பும் தொழில் முனைவோர்கள் தங்கள் நிறுவனத்தின் வரைபடங்களுடன் உரிய ஆவணங்களை இணையதளம் மூலம் விண்ணப்பித்து உரிய உரிமங்கள் பெறலாம்.

அரியலூர் மாவட்டத்தில், தொழில் முனைவோர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் உரிமங்கள் கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின் கீழ் MSME மாவட்ட ஒருமுனை தீர்வு குழுவானது (MSME DISTRICT SINGLE WINDOW COMMITTEE) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்குழு இருவாரங்களுக்கு ஒருமுறை கூடி உரிமம் வழங்குவதிலுள்ள இடர்பாடுகளை களைய நடவடிக்கை மேற்கொள்ளும்.

எனவே அரியலூர் மாவட்டத்திலுள்ள தொழில் முனைவோர்கள் "தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டத்தின்" கீழ் விண்ணப்பித்து உரிமங்கள் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், அரியலூர் அவர்களை (தொலைபேசி எண்.04329-228555) அணுகலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**